# தமிழ்த் தேசிய கலை பண்பாட்டுப் பேரவை (இணை)
மேற்கு அவுஸ்ரேலியா
# Tamil National Arts and Cultural Council (Inc)
Western Australia

Contact : tamilnacc@gmail.com tamilnacc.net.au 0400 204 581

ABN 40 514 343 190


## வீரவணக்க நிகழ்வு - இடையூறுகளுக்கு மனம் வருந்துகிறோம்

வணக்கம்

தமிழ்த் தேசிய கலைபண்பாட்டுப் பேரவை அவுஸ்ரேலிய சட்டங்களுக்கு அமைவாக தமிழ்த் தேசிய மற்றும் கலைபண்பாட்டு நிகழ்வுகளையும் மேற்கு அவுஸ்ரேலியாவில் மிக நேர்த்தியான முறையில் முன்னெடுத்து வரும் அமைப்பாகும். அவ்வகையில் தேசியத் தலைவர் அவர்களுக்கான வீரவணக்கத்தை செலுத்த வேண்டும் என்ற மக்களின் நீண்டகால ஏக்கத்தை கருத்தில் கொண்டும் சாதகமான காலத்தை இறுகப்பற்றியும் 02.08.2025 அன்று தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே பிரபாகரன் அவர்களுக்கான வீரவணக்க நிகழ்வை ஒழுங்கமைத்திருந்தோம்.

கடந்த சில மாதங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த ஒழுங்கமைப்பு மற்றும் நிகழ்வு தொடர்பான தெளிவு படுத்தல்களின் தொடர்ச்சியாக நிகழ்வுக்கான ஆயத்த பணிகள் மிக நேர்த்தியாக முன்னெடுக்கப்பட்ட வந்த நிலையில் கடந்த சில நாட்களாக நிகழ்வுக்கு எதிரான கருத்துக்களும் தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் ஒரு தரப்பினரால் முன்வைக்கப்பட்டு வலுப்படுத்தப்பட்டது. இருப்பினும் நிகழ்வு தொடர்பான பெரும்பான்மையினரின் கருத்துக்கு அமைவாக ஒழுங்கமைப்புக்களை தொடர்ந்து முன்னெடுத்து 02.08.2025 அன்று வீரவணக்க நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வு தொடர்பாக பல்வேறுபட்ட கருத்து முரணான பிரச்சாரங்கள், தடைகள், தனிநபர் தாக்குதல்கள் மற்றும் வசைபாடல்களையும் பொருட்படுத்தாமல் மக்கள் உணர்வுபூர்வமாக கலந்து மிக மிக அமைதியான முறையில் நிகழ்வு மண்டபத்தை தமிழீழத் தேசியத் தலைவர் சார்ந்த உணர்வுகளின் உச்சத்திற்கு கொண்டு சென்றமை வியக்கத்தக்க விடயமாக இருந்தது.
பதினாறு ஆண்டுகள் கடந்து தம் தேசியத் தலைவருக்கு வீரவணக்கம் செலுத்துவதற்காக அணிதிரண்ட பெருமளவான மக்கள் நிகழ்வில் பங்குகொள்ள முடியாமல் தடுத்து நிறுத்தப்பட்டமை, எச்சரிக்கப்பட்டமை போன்ற செயல்களுக்கு மத்தியிலும் இத்தடை-களை தாண்டி மக்கள் உணர்வுபூர்வமாக கலந்து கொண்டு தமது வரலாற்றுக் கடமையை ஆற்றி உள்ளார்கள்.

நிகழ்வு தொடர்பான அசாதாரண சூழ்நிலையால் நிகழ்வில் கலந்துகொண்டு தமது தேசியத் தலைவருக்கு தமது இறுதி வணக்கத்தை செலுத்த முடியாமல் ஏங்கி நிற்கும் மக்களின் துயரில் நாமும் பங்குகொள்கிறோம். மக்கள் சுதந்திரமாக நிகழ்வில் கலந்துகொள்ள முடியாமல் போனமைக்காக மனம் வருந்துகிறோம்.இச் சுதந்திர நாட்டில் நடைபெற்ற நிகழ்விற்கு மனப்பூர்வமாக வருகை தந்தும் மண்டபத்தினுள் வரமுடியாமல் திருப்பி அனுப்பப்பட்டோர். அச்சத்தின் காரணமாக திரும்பிச் சென்றோர். காலநிலை, மண்டப மற்றும் நேரமாற்றம் போன்ற காரணங்களால் அசௌகரியங்களுக்கு உள்ளானோரின் நிலைக்கு நாமும் பொறுப்பேற்க வேண்டி உள்ளோம்.

மண்டபத்தின் வெளியில் இடம் பெற்ற சில செயல்களால் உளரீதியாக பாதிக்கப்பட்டிருக்கும் குழந்தைகள், பெண்கள் மற்றும் பெரியவர்களிடம் தங்களின் பாதுகாப்பில் கவனக் குறைவாக இருந்ததை இட்டு பேரவை நிர்வாகம் மிக கனத்த மனத்துடன் மன்னிப்புக் கோருகிறது. தங்களுக்கான உதவிகள் தேவைப்படுமிடத்து அவற்றை செய்ய பேரவை நிர்வாகம் இதய சுத்தியுடன் உள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

தமிழீழத் தேசியத் தலைவருக்கான தமது வரலாற்றுக் கடமையை ஆற்றிய மற்றும் அக்கடமையை ஆற்ற முடியாமல் தவிக்கும் தமிழ்த் தேசிய உள்ளங்களுடன் எமது கரங்களை இறுகப்பற்றி இவ்வாறான தடங்கல்களை தவிர்த்து தங்களின் ஒத்துழைப்புடன் பேரவை நிர்வாகம் எதிர்காலத்தில் தேசிய, கலை மற்றும் பண்பாட்டு நிகழ்வுகளை நேர்த்தியாகவும் சிறப்பாகவும் ஒழுங்கமைக்கும் என உறுதி கூறுகிறோம். தங்கள் ஒத்துழைப்புக்கும் புரிந்துணர்வுக்கும் நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

நன்றி

நிர்வாகம்

தமிழ்த் தேசிய கலைபண்பாட்டுப் பேரவை (மேற்கு அவுஸ்ரேலியா)